தேதி:- 12-09-2019 அ.வ.எண்.281/2018 வா.சா.1. (ராஜாராம்)

குறுக்குவிசாரணை:-

நான் பி.ஏ ஆங்கிலம் படித்துள்ளேன். எனக்கு ஒரு தம்பி, இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். என் தங்கைகள் பெயர் ராணி மற்றும் சுமதி. ராணி இறந்துவிட்டார். வா.சா.ஆ 1 குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தை நானும் என் உடன்பிறந்தவர்களும் என் தகப்பனாரும் என் பெரியம்மாவான பேச்சியம்மாளும் சேர்ந்து எழுதிக் கொண்டோம் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டு பத்திரம் நடைமுறைக்கு வந்து அதன்படி அவரவர் சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன்படி ஏ அட்டவணைச் சொத்து என் பெற்றோருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ல் ஏ அட்டவணைச் சொத்துக்களில் 5 வது லக்கச் சொத்து என் பெற்றோருக்கு ஆயுட்பரியந்தம் கொடுக்கப்பட்டு அவர்கள் காலத்திற்கு பிறகு எனக்கும் பிரதிவாதிக்கும் சென்றடைய வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 வது லக்கச் சொத்து தவிர ஏ அட்டவணையில் இதர சொத்துக்கள் என் பெற்றோருக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து ஏ அட்டவணையில் இதர சொத்துக்களும் என் பெற்றோர் காலத்திற்கு பிறகு எனக்கும் பிரதிவாதிக்கும் சேர வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்று கூறுகிறார். வா.சா.ஆ 1 ல் ஏ அட்டவணையில் மீதமுள்ள சொத்துக்களைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 5 ஆம்லக்கச் சொத்தில் எனக்கு மாடிப்பகுதியும் பிரதிவாதிக்கு தரைத்தளமும் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 படி பி அட்டவணைச் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி அட்டவணைச் சொத்துக்களை நான் வீட்டுமனைகளாகப் பிரித்து 20 நபர்களுக்கு கிரையம் செய்துள்ளேன். கிரையப்பத்திரங்களில் சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். வா.சா.ஆ 1 படி பி அட்டவணையில் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லித்தான் நான் கிரையம் செய்துள்ளேன். வா.சா-ஆ 1 ல் எப் அட்டவணைச்சொத்து என் பெரியம்மா பேச்சியம்மாளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. என் பெரியம்மாவிற்கு வா.சா.ஆ.1 படி ஆயுட்பரியந்தம் கொடுக்கப்பட்டு அவர் இறப்பிற்கு பிறகு அவருடைய பாகம் எனக்கும் பிரதிவாதிக்கும் சென்றடைய வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் படி பட்டியல் இடப்படாமல் இரண்டு சொத்துக்கள் உள்ளன என்றால்

சரிதான். அவற்றை நானும் பிரதிவாதியும் என் தகப்பனாரும் சமபங்காக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா-ஆ 1 படி ஏ அட்டவணையில் என் தகப்பனாருக்கு சர்வசுதந்திரமாக பாத்தியப்பட்ட சொத்து குறித்து 02.05.2008 ல் என் தகப்பனார் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்டு எழுதி வைத்துவிட்டார். என் தகப்பனார் செட்டில்மெண்டு எழுதி வைத்த பிறகு அந்தச் சொத்து பிரதிவாதிக்குத்தான் பாத்தியம். வா.சா.ஆ 1 ல் பொதுவில் விற்று எடுத்துக் கொள்ள வேண்டிய சொத்து என்று இரண்டு சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு சொத்தை நான் விற்றுவிட்டேன். மற்றொரு சொத்தில் எனக்கு 3 ல்1 பங்கு உள்ளது. நான் விற்ற சொத்தில் பிரதிவாதிக்கு 3 ல்1 பங்கு கிரையத்தொகையை நான் கொடுக்கவில்லை. வா.சா-ஆ 1 படி ஏ அட்டவணையில் 6 வது லக்கச் சொத்தில் எனக்கும் பிரதிவாதிக்கு தலா 9 1/4 செண்ட் கொடுக்கப்பட்டு எனக்கு கொடுக்கப்பட்ட 9 1/4 செண்ட்டை பிரதிவாதியும் என் தகப்பனாரும் விற்றுவிட்டதால் பொதுவாக விற்று எடுத்துக் கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்ட நான் விற்ற சொத்தில் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் என் தகப்பனார் தலா 9 1/4 செண்ட் கொடுத்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பொதுவாக விற்று எடுத்துக் கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ள மற்றொரு சொத்தில் என் தகப்பனாருக்கு இருந்த 1/3 பங்கை பிரதிவாதிக்கு என் தகப்பனார் செட்டில்மெண்டு எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் அந்தச் சொத்தில் எனக்கு 1/3 பங்கும், பிரதிவாதிக்கு 2/3 பங்கும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எப் அட்டவணைச் சொத்தில் 2 ஏக்கர் நிலமும் அதில் ஒரு வீடும் உள்ளது என்றால் சரிதான். அதில் 1 ஏக்கருக்கு அனந்தரி வயல் என்று பெயர் என்றால் சரிதான். என் பெரியம்மா இறந்த பிறகு நான் அதை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். மற்றொரு ஏக்கர் பெயர் மேநஞ்சு வயல் என்றால் சரிதான். அதை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதில் நான் பாகம் கேட்கவில்லை. மேற்படி வீடு நிலத்தில் இல்லை மேலூர் நகரத்திற்குள் உள்ளது. அதில் வாடகைதாரர் இருக்கிறார். அதில் வாடகையை நானும், பிரதிவாதியும் ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்கிறோம். வா.சா.ஆ 1 ல் உள்ள ஏ அட்டவணைச் சொத்துக்களில் 5 வது லக்கச் சொத்து தவிர இதர சொத்துக்களை வழக்குரையில் 1 வது அட்டவணையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எப் அட்டவணைச் சொத்துக்களை வழக்குரையில் 2 வது அட்டவணையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக விற்று எடுத்துக்

கொள்ள வேண்டிய சொத்துக்களில் விற்காத சொத்தை 3 வது அட்டவணையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 1 வது அட்டவணைச் சொத்துக்களைப் பொறுத்த வரையில் என் தகப்பனாரால் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்த பிறகு பிரதிவாதிதான் அந்தச் சொத்துக்களின் உரிமையாளர். அந்த செட்டில்மெண்டுக்குபிறகு அந்தச் சொத்துக்களில் எனக்கு உரிமை இல்லை. அதனால் தாவா 1 வது அட்டவணைச் சொத்துக்களில் எனக்கு பாகம் கிடைக்காது என்றால் சரிதான். தாவா 2 வது அட்டவணை சொத்தில் எனக்கும் பிரதிவாதிக்கும் பாதிபாதி பாகம் உள்ளது. தாவா 3 வது அட்டவணை சொத்தைப் பொறுத்த வரையில் எனக்கு 1/3 பங்கும், பிரதிவாதிக்கு 2/3 பங்கும் உள்ளது என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகோரியபடி எதிர்கோரிக்கை பிரதிவாதிக்கு வழங்க வேண்டுமென்றால் சரியல்ல. தாவா 1 வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்தவரையில் தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல. நான் கொடுத்த சட்டஅறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்னாருக்கு ஞாபகமறதி இருந்தது அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் பிச்சையப்பா ஸ்டோர் என்ற பெயரில் ஜவுளிக்கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான. அவர் வர்த்தக சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். 29.02.2008 ல் மேற்படி சங்கத்தில் மற்றொரு உறுப்பினருக்கு என் தகப்பனாரும் மற்றும் நால்வரும் சேரந்து ஒரு பொதுஅதிகாரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். என் தகப்பனாருக்கு இரண்டு முறை எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். இரண்டு முறையும் தகடுபொருத்தப்பட்டு அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. என் தகப்பனாருக்கு சிகிச்சைக்கான அனைத்தையும் பிரதிவாதிதான் பார்த்துக் கொண்டார்என்றால் சரியல்ல. நான்தான் பார்த்தேன். எனக்கு மதுஅருந்தும் பழக்கம் உண்டு. குடிபோதையில் என் தகப்னாரிடம் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. நான் இரண்டு முறை மறுவாழ்விற்காக அனுமதிக்கப்பட்டேன் என்றர்ல சரியல்ல. அப்போலோ மருத்துவமனையில் என் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அனுமதிக்கப்பட்டேன். மேற்படி ராணியின் கணவரும், மகனும் வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள அனைத்து சொத்துக்கள் குறித்தும் மேலூர் சார்பு நீதிமன்றத்தில் 10/2019 என்ற எண்ணில் (பழைய எண்.837/2013 ) பாக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா-ஆ 1 ல் சி அட்டவணைச் சொத்துக்கள் குறித்து பிரதிவாதி அசல் வழக்கு எண்.725/2009 (புதிய

எண்.9/2019) தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.9/2019 ல் வழக்குரைப்படி தீர்ப்பாக வேண்டுமென்று நான் குறிப்பாணை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ல் உள்ள அனைத்து சொத்துக்கள் குறித்தும் வழக்கு நிலுவையில் இருப்பதால் அனைத்து நபர்களளையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் என் தகப்பனார் எழுதி வைத்த செட்டில்மெண்டு சட்டப்படி செல்லத்தக்கது என்றும் அதை கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும் என் குடும்பத்தாலுரும் போலிசில் புகார் கொடுத்து பிரதிவாதி பெயரில் போலிஸ் விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நிருபண அபிடவிட்டில உள்ள இதச சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றும் பிரதிவாதியின் எதிர்கோரிக்கைபடி தீர்ப்பாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.